# மீட்பரின் மரணம் நமது மீட்புக்காக.

***எபி 9:12*** *வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து,* ***நித்திய மீட்பை*** *உண்டுபண்ணினார்.*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இன்றைய நாளில் நாம் இயேசு கிறிஸ்துவின் சிலுவை பாடு மரணத்தை தியானித்துக்கொண்டிருக்கிறோம். நம் அருமையான பல விசுவாசிகளும் இந்த நாட்களில் இயேசுவின் உபத்திரவம், பாடு, வேதனை, மரணம் இவற்றை சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர். நமது அருமையான ஆலயங்களில் எல்லாம், இயேசுவின் கடைசி சிலுவை வார்த்தைகள் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன. பரிசுத்த ஆவியானவர் தாமே நம் அன்பான சகோதர சகோதரிகள் அனைவரையும் தேவனுடைய சமாதானத்துக்குள்ளும், சத்தியத்துக்குள்ளும் அருமையாக வழி நடத்தும்படியாக நாம் ஜெபித்துக்கொள்வோம். இவைகள் எல்லாம் மிகவும் அருமையான காரியங்கள் ஆகும். ஆனால் இதற்கும் மேலாக நாம், இரண்டு காரியங்களை சரியாக புரிந்து கொண்டால், அது இயேசு கிறிஸ்துவின் மரணத்துதை, அவருக்கும் நமக்கும் மிகுந்த உபயோகமுள்ளதாக ஆக்கும். அது தேவனுக்கு பிரியமானதாகவும் இருக்கும். அந்த காரியங்கள்

1. இயேசுவின் பாடுகளின், பலியின், மரணத்தின் நோக்கம்.
2. இதில் இருந்து நமக்கு என்ன கிடைத்தது.

***தீத் 2:14*** *அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்தஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.*

இயேசு தன்னைதானே நமக்காக ஒப்புக்கொடுத்தது " நம்மை மீட்டுக்கொள்வதற்காக ". இயேசுவின் பாடுகளின், வேதனைகளின், பலியின், இரத்தம் சிந்துதலின் நோக்கம் - நம்மை **" மீட்பது ".**

## " மீட்பு " என்பது என்ன ?.

***எபே 1:7*** *அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.*

கொலோ 1:14 (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.

இவ்வசனம் சொல்லுகிறது மீட்பு என்பது **" பாவமன்னிப்பு ".** இங்கே, மீட்பு என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை " அப்பொலுட்ரோசிஸ் " என்பதாகும். இவ்வார்த்தையின் அர்த்தம் " மீட்கும் பொருள் கொடுத்து, வாங்கப்பட்ட விடுதலை அல்லது விடுவிப்பு.". ( தையீர் வேதாகம வார்த்தை அகராதி )

" கிரயத்துக்காக - மீட்கும் பொருள் கொடுக்கப்பட்டதால் பெறப்பட்ட விடுதலை. " ( வைன்ஸ் வேதாகம அகராதி )

தேவன் நம்மை அவருக்கென்று சிருஷ்டித்தார், ஆனால் நாம் நம்மை பிசாசுக்கு அடிமைகளாக விற்று விட்டோம்.

***ரோம 6:16*** *மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?*

***கொலோ 1:13*** *இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.*

தேவன் மீண்டும் நம்மை இயேசுவின் ரத்தத்தால் விலைக்கு வாங்கினார். இச்செயலை தேவன், பழைய ஏற்பாட்டில் ஓசியா தீர்க்கதரிசி மூலமாக விவரித்து இருக்கிறார். ***( ஓசியா; 1; 2-3, 3;2 ).***

நாம் மீட்கும்படுவதற்கு ( பாவ மன்னிப்புக்கு ) கொடுக்கப்பட்ட விலை இயேசுவின் ஜீவன். அதாவது அவருடைய ரத்தம். *(* ***கொலோ 1:14*** *(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. ).*

இயேசுவின் ஜீவனே நம்மை மீட்கும் பொருள் ***( மத்; 20;28, மாற்கு; 10;45 ).***

***மத் 20:28*** *அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.*

பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்தே நாம் காணலாம், பாவம் மிகவும் அபாயமானது அதன் தண்டனை மரணம்.
***எசே 18:20 பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்;.....***

***லேவி 17:11*** *மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே.*

*எபி 9:22 நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.*

இந்த மரணம் என்கிற தண்டனையைதான், பழைய ஏற்பாட்டின் ரத்தம் சிந்தப்படுகிற பலிகள் குறிப்பிடுகின்றன. ஆனால் இயேசுவின் ரத்தமோ எதையும் குறிப்பிடுவது அல்ல, அது உண்மையில் இயேசுவின் ஜீவன். இந்த ஜீவன் தான் நம்முடைய மீட்பை ( பாவ மன்னிப்பை ) நமக்கு வாங்கி தந்தது.

இந்த மீட்பு ( பாவ மன்னிப்பு ) நாம் கஷ்டபட்டு பெற்றுக்கொள்வதல்ல. இது எற்கனவே செய்து முடிக்கப்பட்ட ஒன்று. நம்முடைய எல்லா பாவங்களும், கடந்த கால, நிகழ்கால, எதிர்கால.. எல்லா பாவங்களும் ஏற்கனவே மன்னிக்கப்பட்டு விட்டன. இந்த பாவமன்னிப்பு இயேசுவின் ரத்தத்தினால் கிடைத்திருக்கிறது. நமக்கு தேவையான இந்த தெய்வீக தயவை, மனிதனுடைய எந்த முயற்சிகளும், செயல்களும், சுய நீதிகளும், பெற்றுத்தரவே முடியாது. எனவே, இயேசுவின் ரத்தம் என்பது, நம்முடைய பாவங்களுக்காக தேவன் கொடுக்கிற விலை.

பாவ மன்னிப்பு என்பது, வேதாகமத்தின் ஒரு முக்கியமான கருத்து ஆகும். இந்த பாவமன்னிப்பை நமக்கு பெற்று தந்தது இயேசுவின் ரத்தம் ஆகும். இந்த பலியானது எவ்வளவு பெரியது என்றால். நம்முடைய பாவங்களை விட மிக மிக பெரியது, எடை உள்ளது - இயேசுவின் ரத்தம். இயேசுவின் ரத்தம் உலகத்தின் சகல பாவங்களுக்கும் - கடந்த கால, நிகழ் கால, எதிர்கால - மன்னிப்பு வாங்கி தந்தது.

***ரோம 4:8*** *எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்.*

**( குறிப்பு; இயேசு எப்போது நம் பாவங்களுக்கு, எவ்வளவு பாவங்களுக்கு, யாருடைய பாவங்களுக்கு, எப்போது செய்த பாவங்களுக்கு மன்னிப்பு பெற்றார், இப்போது ஒரு விசுவாசி பாவம் மீண்டும் செய்தால் என்ன நடக்கும், இரட்சிப்பை கைவிடுதல், இப்போது பாவத்தின் விளைவுகள் போன்றவற்றை நீங்கள் தெளிவாக அறிய விரும்பினால் என்னுடைய *" என்றென்றைக்கும் பூரணப்படுத்தப்பட்டவர்கள் "* என்ற வேத பாடத்தை படிக்கவும் )**

பாவமன்னிப்பு நமது ரட்சிப்பின் முடிவான குறிக்கோள் அல்ல. அது ஒரு முக்கியமான படி. ரட்சிப்பின் முக்கிய குறிக்கோள் " தேவனோடு உறவு ***" ( யோவான்; 17;3 ).*** இந்த உறவுக்கு பாவம் ஒரு தடையாக இருந்தது. இந்த தடையை தேவன் இயேசு கிறிஸ்துவின் ரத்தம் மூலமாக போக்கினார். பாவமன்னிப்பில் மாத்திரம் நின்று கொண்டு, தேவனோடு ஒரு நல்ல உறவுக்குள் கடந்து செல்லாதவர்கள், ரட்சிப்பின் முக்கிய நோக்கத்தை தவற விடுகின்றனர். நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன. அதனால் நாம் தேவனோடு ஒரு நல்ல உறவுக்குள் கடந்து செல்ல முடியும்.

## இந்த மீட்பு நித்திய மீட்பு;

***எபி 9:12*** *வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து,* ***நித்திய மீட்பை*** *உண்டுபண்ணினார்.*

பழைய ஏற்பாட்டின் அடையாளங்கள், விலங்குகளின் ரத்தத்தை, வரப்போகிற உண்மையான பலியாகிய தேவனுடைய குமாரனுக்கு பதிலாக உபயோகித்தது. ஆனால் இயேசுவின் ரத்தம் ஒரு அடையாளம் அல்ல. அது நிஜம். அவர் தன்னுடைய ஜீவனை ( ரத்தத்தை ) நமது பாவங்களுக்கான பலியாக செலுத்தினார். இங்கே கவனிக்க வேண்டிய காரியம், இயேசு ***" ஒரே தரம் "*** மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து நமக்கு ***நித்திய மீட்பை*** உண்டு பண்ணினார். பல விசுவாசிகளும் இதை அறிந்து கொள்ள வில்லை. அவர்கள் நினைக்கிறார்கள், அவர்கள் அடுத்த முறை பாவம் செய்வது வரை மாத்திரமே தற்காலிகமான மீட்பு இருக்கிறது என நம்புகிறார்கள். இது உண்மை அல்ல. எபிரேயர் 9 ஆம் அதிகாரம் முழுவதும், பழைய ஏற்பாட்டு பலிகளின் தற்காலிக விளைவுகளுக்கும், இயேசுகிறிஸ்துவின் பலியின் நிரந்தர விளைவுகளுக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காண்பிக்கிறது. நமக்கு இருப்பது ***நித்திய மீட்பு.***

இந்த நித்திய மீட்பு, நாம் ஏற்கனவே அறிக்கையிட்டு மனம் வருந்திய பாவங்களுக்கு மாத்திரமல்ல. இந்த நித்திய மீட்பு எல்லா பாவங்களுக்கும் - கடந்த கால, நிகழ்கால, எதிர்கால பாவங்களுக்கும் - உள்ளது. இவை எல்லாவற்றுக்கும் பிராயச்சித்தம் செய்யப்பட்டாகி விட்டது. இந்த கருத்தைதான் எபி;9 ஆம் அதிகாரம் குறிப்பிடுகிறது. ***எபிரேயர் 9; 25-28*** வரை உள்ள வசனங்கள் கூறுவது, பழைய ஏற்பாட்டில் ஆசாரியர் பலிகளை தொடர்ந்து செலுத்திக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் இயேசு ஒரே , தரம் எல்லா மனிதருக்குமாக, எல்லா காலத்துக்குமாக ஒரே பலியை செலுத்தினார். நாம் ஒவ்வொரு தடவையும் இயேசுவின் ரத்தத்தை தெளிக்க வேண்டியதில்லை. இயேசுவின் ரத்தம் ஒரே தரம், நித்திய காலமாக நம்மை சுத்திகரித்திருக்கிறது.

**அதனால் ஒரு விசுவாசி தொடர்ந்தும் பாவத்தில் ஜீவிக்கலாம் என்பது அல்ல**.

***ரோம 6:1*** *ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே.*

***ரோம 6:15*** *இதினால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமாகூடாதே.16 மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும்,*

*நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?*

***யோவா 10:10*** *திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.*

***ரோம 6:23*** *பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.*

பாவத்தினால் மனுக்குலம் மிக கொடிய விளைவுகளை சந்திக்க வேண்டியதிருக்கிறது. பாவம் தேவனுக்கெதிரான மீறுதல் மாத்திரமல்ல, **அது,சாத்தான் ஒரு மனிதனின் வாழ்க்கையில் நுழையும் படியாக ஒரு வாசலை திறந்து கொடுக்கிறது.**

பாவம் சாத்தானுக்கு வழி திறந்து கொடுத்து ஒரு விசுவாசியை - சரீரப்பிரகாரமாக, மனோரீதியாக, மனதளவில், ஆத்மீக பிரகாரமாக - அழிக்கும்படியாக வழி திறக்கும்.
ஆகையினால்தான் ஒரு விசுவாசி எப்போதும் பாவத்தை தடுத்து நிறுத்திக்கொள்ள வேண்டும்.

**எனவே எவ்விதத்திலும் அழிவு, துன்பம், நோய்,மரணம், குற்ற உணர்வு இவற்றை பாவம் கொண்டு வரும். மாத்திரமல்ல, அதை தொடர்ந்தால், அது நம் இதயத்தை கடினப்படுத்தி நம் ரட்சிப்பை கைவிட வைக்கும். ஆகவே ஒரு விசுவாசி எவ்வகையான பாவத்துக்கும் விலகி இருக்க வேண்டும். பாவம் கொடியது.**

## இயேசு தன் மரணத்தால், புதிய உடன்படிக்கையை நடைமுறைக்கு கொண்டுவந்தார்;

***எபி 9:15*** *ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.*

***16*** *ஏனென்றால், எங்கே மரணசாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாகவேண்டும்.*

மரண சாசனம் என்பது அதை எழுதியவரின் மரணத்துக்கு பின்பே நடைமுறைக்கு -அமுலுக்கு வரும். அதனால்தான் பழைய ஏற்பாட்டில், ஒரு உடன்படிக்கையை அமுலுக்கு கொண்டுவருவதற்காக விலங்குகளின் இரத்தம் சிந்தப்பட்டது. எனவே புதிய ஏற்பாடு அமுலுக்கு வருவதற்கும் ஒருவர் மரிக்க வேண்டும். அப்படி மரித்தவர் - இயேசு கிறிஸ்து. அவர் மரித்ததால் அவரது சாசனமாகிய புதிய உடன்படிக்கை அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால் மற்ற மரண சாசனங்களை போல அல்லாமல், இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்து தன் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துகிறவராகவும் இயேசு இருக்கிறார். என்றென்றும் அவரது உடன்படிக்கையின் எல்லா நியமங்களும் நிறைவேற்றப்படும்படி அவர் பார்த்துக்கொள்கிறார்.

# இந்த மீட்பில் நமக்கு கிடைத்திருப்பது என்ன?

1. **நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்பும், ஆபிரகாமின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வதும்.**

***கலா 3:13*** *மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.*

***14*** *ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.*

நியாயப்பிரமாணத்தின் தண்டனைய ஏற்றுக்கொண்டதால், இயேசு நியாயப்பிரமாணத்தால் வரும் சாபத்தை நீக்கினார். நியாயப்பிரமாணத்தின் சாபத்தையும் தண்டனையையும், நமக்கு பதிலாக இயேசு பெற்றுக்கொண்டதால், ஆபிரகாமின் ஆசீர்வாதங்களாகிய கிருபையும் விசுவாசமும் நமக்கு கிடைக்கிறது. ஆபிரகாமின் ஆசீர்வாதம் என்பது, இயேசுவின் மேல் நாம் வைக்கும் விசுவாசமே நமது நீதியாக எண்ணப்படுவது. இது நமது தகுதியால் உண்டானது அல்ல. இதனால் நாம் விசுவாசத்தால் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள முடியும்.

2. **புத்திர சுவிகாரம்.**

***கலா 4:4*** *நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக,*

நாம் நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்தில் இருந்து மாத்திரம் மீட்கப்படவில்லை, மாறாக நாம் மீட்கப்பட்டு தேவனுடைய புத்திரர்கள் ஆக்கப்பட்டோம். பலரும் நாம் மீட்கப்பட்டோம் என்ற நிலையிலேயே நின்று விடுகிறார்கள். அதில் நாம் சந்தோஷப்பட வேண்டும். ஆனாலும் அதில் இருந்து தொடர்ந்து சென்று, நம்முடைய மீட்பின் முழு உபயோகங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். அடிமைத்தனத்தின் கூண்டிலிருந்து விடுவிக்கப்படுவது நல்லது. அது ஒரு மகாபெரிய செயல். ஆனாலும் தேவன் நம்மை அடிமைத்தனத்தின் கூண்டில் இருந்து விடுவித்து விட்டு பின் எப்படியும் பிழைத்துக்கொள்ளுங்கள் என்று விட்டு செல்ல வில்லை. மாறாக

நம்மை அடிமைத்தனத்தின் கூண்டில் இருந்து விடுவித்து, பின் நம்மை தன் சொந்த புத்திரர்கள் ஆக்கிக்கொண்டார். ( ரோமர்; 8;15-16 )

**3. சகல அக்கிரமங்களில் இருந்து மீட்டு, சுத்திகரிக்கப்பட்ட சொந்த ஜனம், நற்கிரியைகளை செய்ய பக்திவைராக்கியம் உள்ளவர்கள் என்னும் நிலை.**

***தீத் 2:14*** *அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்தஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.*

இயேசு நம்முடைய " சில அக்கிரமங்களில் இருந்து " மாத்திரம் மீட்க வில்லை. அவர் " சகல அக்கிரமங்களில் இருந்தும் " மீட்டுக்கொண்டார். அவர் எல்லா அக்கிரமங்களுக்கான விலையும் கொடுத்தார். தீத்து; 2;11,12 சொல்லுகிறபடி, தேவனுடைய கிருபை, நம்மை லௌகீக இச்சைகளை வெறுத்து பரிசுத்தமாக வாழ கற்பிக்கிறது. கிருபையை பற்றி நன்கு அறிந்தவர்கள் நற்கிரியைகள் செய்ய பக்தி வைராக்கியம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நற்கிரியைகள் செய்வதனால் தேவன் நம்மை மீட்டுக்கொள்ள வில்லை, நற்கிரியைகள் செய்வதற்காக தேவன் நம்மை மீட்டுக்கொண்டார்.

**4. செத்த கிரியைகளற மனசாட்சி சுத்திகரிக்கப்படுதல்.**

***எபி 9:14*** *நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!*

செத்த கிரியைகள் என்பது " சாவை உண்டு பண்ணுகிற கிரியைகள் ". இதை தேவன் நம்மை ஏற்றுக்கொள்வார் என நினைத்து பலரும் செய்கிற மதசம்பிரதாய சடங்குகளை குறிப்பதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

**5. நீதிகரணம்.**

***ரோம 3:24*** *இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்;*

நீதிகரணம் என்பது " ஒருவரை குற்றமற்றவர், நீதிமான் என்று அறிவிப்பது". அதாவது ஒருபோதும் பாவம் செய்யவில்லை என்ற நிலையில்.

இவை மாத்திரம் அல்ல, இன்னும் சுகமாக்கப்படுதல் ( 1 பேது; 2;24 ), செழிப்பு, ஐசுவரியம் ( 2 கொரி; 8;9 ), பரிசுத்த ஆவியானவரின் பூரண அபிஷேகம் ( கலா; 3;13-14 ), சாத்தானின் தோல்வி ( கொலோ; 2;14-17 ). இவை சில உதாரணங்கள் மட்டுமே.

## நமது ஆத்தும, சரீர மீட்பு;

*ரோம 8:23 அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்.*

*எபி 10:39 நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.*

*But we are not of them who draw back unto perdition; but of them that believe to the saving of the soul.*

இயேசு கிறிஸ்து நமது ஆவி, ஆத்துமா, சரீரத்துக்கான மீட்பை வாங்கினார். ஆனாலும் நமது ஆத்தும, சரீர மீட்பு இன்னும் முழுமையடைய வில்லை. நமது ஆவியின் மீட்பு முற்றிலும் முழுமையடைந்து இருக்கிறது. அதாவது நமது ஆவியின் மீட்பை இன்னும் நமது சரீரத்திலும், ஆத்துமாவிலும் நாம் முழுமையாக பெற்றுக்கொள்ள வில்லை. இது நமது மரணத்துக்கு பின் அல்லது இயேசுவின் வருகையில் நாம் அவரை சந்திக்கும்போது, நாம் மகிமையான சரீரத்தை பெற்றுக்கொள்ளும்போது முழுமை பெறும். ஆனாலும், நமது " மனதை புதிதாக்குவதன் " மூலமாக இதை நாம் இப்போதே துரிதப்படுத்த முடியும் ( ரோமர்; 12;1,2 ). நாம் எவ்வளவுக்கதிகமாக வேத வசனங்களை படித்து நம் மனதை புதிதாக்குகிறோமோ, அவ்வளவுக்கதிகமாக நம் ஆவியின் மீட்பை நம் ஆத்துமாவில், சரீரத்தில் அனுபவிக்க முடியும். இதுவே இயேசு கிறிஸ்துவின் பாடுகளின், மரணத்தின் குறிக்கோள் ஆகும். ( குறிப்பு; **வேதாகமத்தின் பல பகுதிகளும் நன்றாக புரிய *" ஆவி, ஆத்துமா, சரீரம் "* பற்றி அறிந்து கொள்வது அவசியம். நீங்கள் அறிய விரும்பினால், எனது " கிறிஸ்துவுக்குள் நமது அடையாளம் " என்ற வேத பாடத்தை படிக்கவும்** )

அன்பு சகோதரா/சகோதரி ! ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக, மீட்பின் எல்லா ஆசீர்வாதங்களோடும் வாழுங்கள் என நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். அதனால் இந்த உலகம் இயேசுவை அறிந்து கொள்ளட்டும். நம் மீட்பர், மகா மீட்பர் பெரியவர் என்றும் அவர் என்றும் ஜீவிக்கிறார் என்றும் அறிந்து கொள்ளட்டும்.

ஆமென்.